Private E-Sevai Center
CSC Center
STAR RAINBOW SERVICES
VADAPALANI
8144337349

ஹலோ மிரர் மெட்ராஸ்
RNI No.TNBIL/2021/81709
hellomadrasdaily@gmail.com
தினசரி காலை நாளிதழ்
உள்ளது உள்ளபடி

KARUNAII TRUST
அன்னை சிறப்பு பள்ளி
Tamilnadu Association For The Rights of All Types of Differently Abled and Caregivers - TARATDAC
Contact :
98413 59935

மலர் 3 | சென்னை | தினசரி | 4 பக்கம் | ஞாயிற்றுக்கிழமை, மார்ச் 24 2024 | இதழ் 253

# தமிழகம் முழுவதும் வாகன சோதனை தீவிரம் கட்டுக் கட்டாக பணம்; தங்க நகைகள் சிக்கியது ராசிபுரத்தில் ரூ.6 கோடி தங்கம்; புதுச்சேரி எல்லையில் ரூ.31/2 கோடி பணம் பிடிப்பட்டது ராசிபுரத்தில் கைப்பற்றப்பட்ட தங்க நகைகள்

சென்னை, 24 மார்ச் 2024: நாடாளுமன்ற தேர்தல் அடுத்த மாதம் 19 ந்தேதி நடைபெற உள்ள நிலையில் தமிழகம் முழுவதும் பறக்கும் படையினர் வாகன சோதனைகளை தீவிரப்படுத்தி உள்ளனர். ஆங்காங்கே கார், வேன்களை நிறுத்தி சோதனை போட்டதில் கட்டுக்கட்டாக பணம், தங்க நகைகள் சிக்கியது. இரவு, பகலாக இந்த சோதனைகள் நடைபெறுகிறது.

ராசிபுரம் அருகே 6 கோடி ரூபாய் மதிப்புள்ள தங்க நகைகள் பிடிப்பட்டது. தமிழகம் புதுச்சேரி எல்லையில் ரூ.3.5 கோடி ரொக்க பணம் பறிமுதல் செய்யப்பட்டது.

நாடாளுமன்ற தேர்தல் தேதி அறிவிக்கப்பட்ட உடனேயே தேர்தல் நடத்தை விதிகள் அமலுக்கு வந்துவிட்டன. உடனடியாக பறக்கும் படைகள் அமைக்கப்பட்டு ஆங்காங்கே சோதனைகள் நடத்தப்பட்டன. ரூ.50 ஆயிரத்துக்கு மேல் யாரும் ரொக்கமாக எடுத்து செல்லக்கூடாது என்று உத்தரவிடப்பட்டிருந்தது. இதற்கு மேல் யாரும் எடுத்து சென்றால் உரிய ஆவணங்களை பறக்கும் படையினரிடம் காட்ட வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டிருந்தது. இதனையும் மீறி பல பகுதிகளில் ரொக்க பணம், தங்க நகைகள் கொண்டு செல்லப்பட்டது.

பறக்கும் படையினர் நடத்திய அதிரடி வாகன சோதனையில் கட்டுக்கட்டாக பணம், நகை பறிமுதல் செய்யப்பட்டது.

கடந்த 16 ந்தேதி முதல் நேற்று வரை ரூ.11.95 கோடி மதிப்புள்ள ரொக்க பணம் மற்றும் பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டன. இதில்



மதுபாட்டில்கள், போதை பொருட்கள், பரிசு பொருட்களும் அடங்கும்.

புதுச்சேரி- தமிழக எல்லையில் உரிய ஆவணம் இல்லாமல் வாகனத்தில் எடுத்துச் செல்லப்பட்ட ரூ.3லு கோடியை தேர்தல் பறக்கும் படையினர் பறிமுதல் செய்தனர்.

புதுச்சேரி திண்டிவனம் சாலையில் ஜிப்மர் எல்லையில் உதவி தேர்தல் நடத்தும் அதிகாரி யஷ்வந்தையா தலைமையில் பறக்கும் படையினரும் காவல் துறையினரும் சோதனையில் ஈடுபட்டனர். அப்போது அந்த வழியாக வந்த ஏ.டி.எம்.மிற்கு பணம் நிரப்பும் தனியார் வாகனம் வந்தது. அந்த வாகனத்தை நிறுத்தி தேர்தல் பறக்கும் படையினர் சோதனை செய்தனர். சோதனையில் கோடி கணக்கில் கட்டுக்கட்டாக ரூ. 500 புதிய நோட்டுகளும் பழைய நோட்டுகளும் இருந்தன.

இவற்றிற்கு உரிய ஆவணங்களை வாகனத்தில் இருந்தவர்களிடம் இல்லை. அவர்கள் வைத்திருந்த ரசீதில் ஜனவரி 21-ந் தேதி பணம் எடுத்ததற்கான ஆதாரம் இருந்தது. ஆனால் இன்று வரை பணத்தை ஏ.டி.எமில் நிரப்பாமல் வாகனத்தில் வைத்து சுற்றியது ஏன் என்ற சந்தேகம் ஏற்பட்டது. இதனையடுத்து அதிகாரிகள் வாகனத்தையும், அதில் இருந்த 2 நபர்களையும் புதுச்சேரி கணக்கு மற்றும் கருவுலாக அலுவலகத்திற்கு அழைத்து சென்றனர். அங்கு பணத்தை எண்ணி பார்த்ததில் ரூ 3 கோடியே 47 லட்சம் இருப்பது தெரிய வந்தது.

மேலும் ரூ 98 லட்சத்தை ஏ.டி.எம். எந்திரங்களில் நிரப்பியதாகவும் ரூ.1 கோடி வங்கி அலுவலகத்தில் உள்ளதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர். இதனால் ஒட்டு மொத்தமாக ரூ.5 கோடிக்கு மேல் பண பரிமாற்றம் செய்ய இருந்த நிலையில் ஆவணங்கள் ஏதும் இல்லாத காரணத்தால் பணம் பறிமுதல் செய்யப்பட்டு கணக்கு கருவூலகத்தில் வைக்கப்பட்டது.

வருமானவரித்துறை அதிகாரிகள் விசாரணைக்கு பிறகு உரிய ஆவணங்கள் காண்பித்தால் பணம் திரும்ப ஒப்படைக்கப்படும் என தேர்தல் நடத்தும் அதிகாரி யஷ்வந்தய்யா தெரிவித்தார்.

நாமக்கல் மாவட்டம் ராசிபுரம் அருகே தேர்தல் பறக்கும் படையினர் இன்று சோதனையில் ஈடுபட்டனர். அந்த சோதனையில் ஒரு தனியார் நிதி நிறுவனம் 29 கிலோ எடையுள்ள ரூ.6.2 கோடி மதிப்புள்ள தங்க நகைகளை உரிய ஆவணங்களின்றி எடுத்து சென்றது கண்டறியப்பட்டது. அந்த தங்க நகைகளை தேர்தல் பறக்கும் படை அதிகாரிகள் பறிமுதல் செய்தனர். பறிமுதல் செய்யப்பட்ட நகைகள் அனைத்தும் தேர்தல் நடத்தும் அதிகாரியிடம் ஒப்படைக்கப்பட்டது.

மேலும் இந்த தங்க நகைகளை எடுத்து வந்தவர்களை பறக்கும் படை அதிகாரிகள் கைது செய்து தீவிர விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

சென்னை ஆயிரம் விளக்கு ஆண்டர்சன் சாலை மூர்ஸ் சாலை சந்திப்பில் போலீசார் வாகன தணிக்கையில் ஈடுபட்டிருந்தனர். அப்போது அந்த வழியாக வந்த ஒரு காரை சோதனையிட்டனர். அப்போது காரில் ரூ.6.7 லட்சம் பணம் இருந்ததை பார்த்தனர். காரில் இருந்த வருமான வரித்துறை பணியாளர்கள் நாராயணசாமி, அட்சய் குமார் ஆகியோர் விமான நிலையத்தில், பறிமுதல் செய்யப்பட்ட பணம் என தெரிவித்துள்ளனர்.

இதையடுத்து போலீசார் தேர்தல் பறக்கும் படை அதிகாரிகளுக்கு தகவல் தெரிவித்தனர். வருமான வரித் துறை ஆய்வாளர் ஸ்ரீராமுலு இது தொடர்பாக முறைப்படி விளக்க கடிதம் கொடுத்து, பறிமுதல் செய்த 6.7 லட்சம் பணத்தை பறக்கும் படை அதிகாரிகளிடமிருந்து பெற்றுச்சென்றார்.

போலீசார் நடத்திய விசாரணையில் உரிய ஆவணங்கள் இன்றி டெல்லிக்கு பணத்தை எடுத்துச் செல்ல முயன்ற தனியார் நிறுவன பணியாளரிடம் இருந்து பறிமுதல் செய்யப்பட்ட பணம் என தெரியவந்தது.

விருதுநகர் மாவட்டம் சாத்தூர் அருகில் உள்ள உப்பு பட்டி விளக்கு பகுதியில் இருசக்கர வாகனத்தை நிறுத்தி சோதனை செய்த போது அதில் வைத்திருந்த சாக்குப் பையில் அரசு முத்திரை பதித்த மது பாட்டில்கள் இருந்தது தெரிய வந்ததை அடுத்து அனுமதி இன்றி மது பாட்டில்கள் கொண்டு வந்ததன் காரணமாக பையில் இருந்த 48 மது பாட்டில்கள் மற்றும் இருசக்கர வாகனத்தையும் பறிமுதல் செய்து ஆலங்குளம் காவல் நிலையத்தில் தேர்தல் பறக்கும் படை குழுவினர் ஒப்படைத்தனர்.

கோவையில் பணம் பறிமுதல் செய்யப்பட்டது குறித்து தேர்தல் பிரிவு அதிகாரிகள் கூறியதாவது: கடந்த 20-ம் தேதி வரை 61 வழக்குகளில் ரூ.1.59 கோடி பறிமுதல் செய்யப்பட்டது. மார்ச் 21ம் தேதி 11 வழக்குகள் பதிவு செய்து ரூ.8.91 லட்சம் பறிமுதல் செய்யப்பட்டது. இதுவரை மொத்தம் 72 வழக்குகளில் ரூ.1.68 கோடி பணம் பறிமுதல் செய்யப்பட்டது. பறிமுதல் செய்யப்பட்ட ரொக்கப் பணம் இதுவரை ரூ.25 லட்சம் உரியவர்களிடம் திரும்ப வழங்கப்பட்டுள்ளது. கடந்த 21-ம் தேதி நிலவரப்படி ரூ.1.42 கோடி ரொக்கப் பணம் விசாரணை நிலுவையில் உள்ளது என்றனர்.




PASSPORT | MSME | PAN | AADHAAR
FSSAI | PATTA | LEGALHEIR
2,4 WHEELER INSURANCE
PROPERTY TAX, EB - NAME TRANSFER
STATE AND CENTRAL GOVT
AUTHORISED FRANCHISEE
ALL ONLINE SERVICES
இ-சேவை மையம்
ஸ்டார் ரெயின்போ சர்வீசஸ்
11,SOUTH PERUMAL KOIL STREET, VADAPALANI, CHENNAI - 600 026.
8148231942 / 8144337349
பொது இ-சேவை மையம்

# தமிழகத்தில் 5 சுங்கச்சாவடிகளில் 1-ந் தேதி முதல் கட்டணம் உயர்வு

சென்னை, 24 மார்ச் 2024: தமிழகத்தில் 5 சுங்கச்சாவடிகளில் ஏப்ரல் 1ம் தேதி முதல் கட்டணம் உயர்த்தப்படுவதாக தேசிய நெடுஞ்சாலை ஆணையம் அறிவித்து உள்ளது.

இதன்படி திருச்சி கல்லக்குடி, அரியலூர் மணகெதி, வேலூர் வல்லம், திருவண்ணாமலை இளம்கரியாந்தல், விழுப்புரம் தென்னமாதேவி சுங்கச்சாவடிகளில் சுங்கக்கட்டணம் உயர்த்தப்பட்டு உள்ளது. ஒரு முறை பயணம் செய்வது, ஒரே நாளில் திரும்பி வருவதற்கான கட்டணம் ரூ.5ல் இருந்து ரூ.20 வரையிலும், மாதாந்திர சுங்கச்சாவடி கட்டணம் ரூ.100 முதல் ரூ.400 வரை கட்டணம் உயர்த்தப்பட்டுள்ளது.

# தமிழகத்தில் 5 நாட்கள் வெப்பம் அதிகரிக்கும்

சென்னை, 24 மார்ச் 2024: தமிழகத்தில் 5 நாட்கள் வெப்பம் அதிகரிக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

தமிழகம், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் இன்று முதல் 29ந்தேதி வரை வறண்ட வானிலை நிலவக்கூடும்.

தமிழகத்தில் ஓரிரு இடங்களில் இன்று முதல் 27ந்தேதி வரை அதிகபட்ச வெப்பநிலை படிப்படியாக 2 முதல் 3 டிகிரி செல்சியஸ் அதிகரிக்கக்கூடும். மேலும், இன்று மற்றும் நாளை அதிக வெப்பநிலை மற்றும் அதிக ஈரப்பதம் இருக்கும் பொழுது ஓரிரு இடங்களில் அசௌகரியம் ஏற்படலாம்.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் அடுத்த 48 மணி நேரத்திற்கு வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். அதிகபட்ச வெப்பநிலை 33 34 டிகிரி செல்சியஸை ஒட்டியும், குறைந்தபட்ச வெப்பநிலை 25 26 டிகிரி செல்சியஸை ஒட்டியும் இருக்கக்கூடும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# முதல்வர் பதவியை கெஜ்ரிவால் ராஜினாமா செய்ய பாஜக வலியுறுத்தல்

சென்னை, 24 மார்ச் 2024: டெல்லி முதல்வர் பதவியை அரவிந்த் கெஜ்ரிவால் ராஜினாமா செய்ய வேண்டும் என்று பாஜக வலியுறுத்தியுள்ளது.

இது தொடர்பாக டெல்லியில் செய்தியாளர்களிடம் பேசிய பாஜக எம்பி மனோஜ் திவாரி, "ஊழல் வழக்கில் டெல்லி முதல்வர் அரவிந்த் கெஜ்ரிவால் கைது செய்யப்பட்டுள்ளார். ஆனால், அவர் இன்னமும் தனது பதவியை ராஜினாமா செய்யவில்லை. சிறையில் இருந்தபடியே அவர் அரசை நடத்துவார் என ஆம் ஆத்மி கட்சியினர் தொடர்ந்து கூறுகிறார்கள். வன்முறை கும்பல்தான், சிறையில் இருந்தபடியே தங்கள் வேலையை செய்யும் என கேள்விப்பட்டிருக்கிறோம். சிறையில் இருந்து கொண்டு யாரும் அரசை நடத்த மாட்டார்கள்.

டெல்லிக்காக உயிரைக் கொடுத்து வேலை செய்தவர் கெஜ்ரிவால் என அவரது ஆதரவாளர்கள் கூறுகிறார்கள். டெல்லியை துயரத்தின் விளிம்புக்கு கொண்டு வருவதற்கே அவர் தனது உயிரைக் கொடுத்து வேலை செய்துள்ளார். டெல்லி மக்கள் அவர் மீது கடும் கோபத்தில் இருக்கிறார்கள் எனத் தெரிவித்துள்ளார்.

ஆம் ஆத்மி கட்சியின் மூத்த தலைவர் சவுரப் பரத்வாஜ் கூறுகையில், "பொதுமக்கள் என்ன கூறுகிறார்களோ அதன்படி செயல்படக் கூடியவர் கெஜ்ரிவால். முக்கிய முடிவுகள் அனைத்தையும் அவர் மக்கள் சொல்படியே மேற்கொண்டுள்ளார். கைது செய்யப்படுவதற்கு முன்பாக, கட்சியின் அனைத்து எம்எல்ஏக்கள், கவுன்சிலர்களை கெஜ்ரிவால் சந்தித்துப் பேசினார். நாங்களும் எங்கள் வார்டில் உள்ள மக்களோடு பேசினோம். அனைவருமே கெஜ்ரிவால் முதல்வர் பதவியில் தொடர வேண்டும் என்றுதான் சொல்லி இருக்கிறார்கள்" என தெரிவித்துள்ளார்.

இதனிடையே, கெஜ்ரிவால் கைது செய்யப்பட்டதைக் கண்டித்து ஆம் ஆத்மி கட்சியினரும், இண்டியா கூட்டணி கட்சியினரும் இணைந்து டெல்லியில் உள்ள ஷாஹீதி பூங்காவில் இன்று கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். பஞ்சாப் முதல்வர் பகவந்த் மான் இதில் கலந்து கொண்டார். அப்போது பேசிய அவர், "எதிர்க்கட்சித் தலைவர்கள் தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபடுவதைத் தடுக்கவே இந்த கைது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதுதான் சுதந்திரமா? நீங்கள் கெஜ்ரிவாலை கைது செய்யலாம். அவரது கொள்கையை உங்களால் கைது செய்ய முடியுமா?" என கேள்வி எழுப்பி உள்ளார்.

# கனடாவில் பணி செய்து வரும் வெளிநாட்டவர் எண்ணிக்கையை குறைக்க அரசு திட்டம்

சென்னை, 24 மார்ச் 2024: கனடாவில் பணி செய்து வரும் வெளிநாட்டவர்களின் எண்ணிக்கையை குறைக்க கனடா அரசு திட்டமிட்டுள்ளது.

கனடா நாட்டில் பிற நாட்டிலிருந்து வேலைக்காக வருபவர்களின் எண்ணிக்கை கணிசமாக அதிகரித்து வருகிறது. இதனை கவனித்த கனடா அரசு, இது குறித்த அதிரடியான முடிவை பிறப்பித்திருக்கிறது. கடந்த சில ஆண்டுகளாக கனடாவிற்கு வேலைக்காக குடிப்பெயர்பவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. இதனால் தற்காலிக பணிக்காக நியமிக்கப்படும் பிறநாட்டவர்களின் எண்ணிக்கையை குறைக்க திட்டமிடப்பட்டிருக்கிறது கனடா.

தற்போது 25 லட்சம் பேர் வரையில் பிறநாட்டைச் சேர்ந்த தற்காலிக பணியாளர்கள் இருக்கிறார்கள். இது அந்த நாட்டின் மக்கள் தொகையில் 6.2 சதவீதமாக இருக்கிறது. அடுத்த மூன்று ஆண்டுகளில் இந்த 6.2 சதவீதத்தை 5 சதவிகிதமாக குறைக்க வேண்டும் என்கிற குறிக்கோளோடு சட்ட முன்வடிவு (மசோதா) தாக்கல் செய்யப்பட்டு இருக்கிறது.

மேலும் இந்த இலக்கை, கனடாவின் மாகாணங்களில் இருப்பவர்களுடன் கலந்தாலோசனை செய்த பிறகு அறிவிக்கப்படும் எனவும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதுமட்டுமல்லாது தற்காலிக பணிக்காக பிற நாட்டிலிருந்து வருபவர்களுக்கான இந்த கட்டுப்பாடுகள் மே 1ந் தேதி முதல் நடைமுறைக்கு வரும் எனவும் அறிவிக்கப்பட்டிருக்கிறது. மேலும் இதோடு சேர்ந்து மாணவர்களுக்கான விசா மற்றும் பிற பயனாளிகளுக்கான விசா கட்டுப்பாடுகளும் நடைமுறைக்கு வரும் என அறிவிக்கப்பட்டிருக்கிறது.

மேலும் கனடாவில் தற்போது இருக்கக்கூடிய வேலை சந்தை மிகவும் இறுக்கமாக இருப்பதாகவும், நாட்டின் மக்கள் தொகை அதிகரிப்பதால் அதிகப்படியான வெளிநாட்டவர்கள் நாட்டிற்குள் வருவதால் வேலைக்கான தட்டுப்பாடு ஏற்படுவதால் இந்த முடிவு எடுக்கப்பட்டதாக தகவல் வெளியாகியுள்ளது. தற்போது கார்ப்பரேட் நிறுவனங்களில் வெளிநாட்டு வேலை ஆட்களின் சதவிகிதம் 30ஆக இருப்பதாகவும் இதனை 20 சதவிகிதத்திற்கு குறைக்க வேண்டும் எனவும் முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

# சேலம் பெரியசோரகை பெருமாள் கோவிலில் சாமி தரிசனம் செய்து நாளை பிரச்சாரத்தை தொடங்குகிறார் எடப்பாடி

சென்னை, 24 மார்ச் 2024: சேலம் பெரியசோரகை சென்றாய பெருமாள் கோவிலில் சாமி தரிசனம் செய்து எடப்பாடி பழனிசாமி நாளை பிரச்சாரத்தை தொடங்குகிறார்

ஏப்ரல் 19 நதேதி நடைபெறும் நாடாளுமன்ற தேர்தலில் தமிழகத்தில் 4 முனை போட்டி ஏற்பட்டுள்ளது. இதில் அண்ணா தி.மு.க. தலைமையிலான கூட்டணியில் புதிய தமிழகம், தே.மு.தி.க. எஸ்.டி.பி.ஐ. உள்ளிட்ட கட்சிகள் இடம் பெற்றுள்ளன. இதில் அ.தி.மு.க. 33 இடங்களில் போட்டியிடுகிறது. தே.மு.தி.க. 5 தொகுதிகளிலும், புதிய தமிழகம் தென்காசியிலும், எஸ்.டி.பி.ஐ. கட்சி திண்டுக்கல் தொகுதியிலும் போட்டியிடுகிறது. அண்ணா தி.மு.க. சார்பில் போட்டியிடும் வேட்பாளர்கள் பட்டியலை எடப்பாடி பழனிசாமி வெளியிட்டார். இதே போல் கூட்டணி கட்சி வேட்பாளர்களும் அறிவிக்கப்பட்டுள்ளனர்.

திருச்சியில் நாளை (24-ந்தேதி) அண்ணா தி.மு.க. வேட்பாளர்கள் மற்றும் கூட்டணி கட்சிகளின் வேட்பாளர்கள் 40 பேரை ஒரே மேடையில் எடப்பாடி பழனிசாமி அறிமுகப்படுத்தி பிரச்சாரம் செய்கிறார்.

இதற்காக எடப்பாடி பழனிசாமி இன்று சென்னையில் இருந்து விமானம் மூலம் சேலம் வந்தார். பின்னர் ஓமலூரில் உள்ள கட்சி அலுவலகத்துக்கு சென்று கட்சி நிர்வாகிகளை சந்தித்து பேசினார். அப்போது சேலம் நாடாளுமன்ற தொகுதி வேட்பாளர்களை அறிமுகம் செய்து வைத்தார்.

மேலும் தேர்தல் அறிக்கை குறித்து விளக்கமாக மக்களிடம் எடுத்துரைத்து வாக்கு சேகரிப்பில் ஈடுபட கட்சி நிர்வாகிகளுக்கு வலியுறுத்தினார்.

நாளை காலை சேலம் ஜலகண்டாபுரம் அருகே உள்ள பெரியசோரகை சென்றாய பெருமாள் கோவிலில் எடப்பாடி பழனிசாமி சாமி தரிசனம் செய்கிறார். பின்னர் அந்த பகுதியில் திறந்த வேனில் தனது பிரச்சாரத்தை தொடங்குகிறார்.

ஒவ்வொரு தேர்தலிலும் எடப்பாடி பழனிசாமி இந்த கோவிலில் சாமி தரிசனம் செய்த பின்னர் தான் தனது பிரச்சாரத்தை தொடங்குவது வழக்கம். அதே போல் இந்த நாடாளுமன்ற தேர்தல் பிரச்சாரத்தையும் தொடங்க உள்ளார். பின்னர் இங்கிருந்து திருச்சிக்கு புறப்பட்டு செல்கிறார்.

எடப்பாடி பழனிசாமி நாளை முதல் தனது தேர்தல் பிரசாரத்தை தொடங்குவதால் அண்ணா தி.மு.க. தொண்டர்கள் மற்றும் கூட்டணி கட்சி தொண்டர்கள், நிர்வாகிகள் உற்சாகம் அடைந்து உள்ளனர்.

# தஞ்சாவூரில் நடைப் பயிற்சியின் போது வாக்கு சேகரித்தார் ஸ்டாலின்



சென்னை, 24 மார்ச் 2024: தஞ்சாவூரில் இன்று காலை நடைப் பயிற்சியின் போது முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் மக்களிடம் வாக்கு சேகரித்தார்.

தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் தேர்தல் பிரசாரத்தை திருச்சி மாவட்டம் சிறுகனூரில் நேற்று மாலை தொடங்கி வைத்து பேசினார். இந்த கூட்டம் முடிந்தவுடன் காரில் புறப்பட்டு தஞ்சாவூருக்கு நேற்றிரவு வந்தார். தஞ்சாவூர் சங்கம் ஓட்டலில் தங்கியுள்ள முதல்வர் மீண்டும் இன்று மாலை புறப்பட்டு திருவாரூர் மாவட்டத்துக்குச் செல்கிறார்.

இதனிடையே, தஞ்சாவூர் அன்னை சத்யா விளையாட்டரங்கத்தில் தமிழக முதல்வர் இன்று காலை நடைப்பயிற்சி மேற்கொண்டார். அப்போது அங்கு நடைப்பயிற்சியில் ஈடுபட்ட மக்களிடம் வாக்கு சேகரித்தார். பெண்கள், சிறுவர்கள் உள்ளிட்டோர் முதல்வரிடம் செல்ஃபி எடுத்து மகிழ்ந்தனர். மேலும் விளையாட்டு வீரர்களின் விருப்பத்தின்படி கைப்பந்தை அடித்து போட்டியைத் தொடங்கி வைத்தார்.

பின்னர், காமராஜர் சந்தைக்குச் சென்று வியாபாரிகள் மற்றும் காய்கறி வாங்க வந்த மக்களிடம் வாக்கு சேகரித்தார். அங்கும் முதல்வரிடம் வியாபாரிகள், பொதுமக்கள் செல்பி எடுத்துக் கொண்டனர். இதையடுத்து, பழைய பேருந்து நிலையப் பகுதியில் உள்ள இனிப்பகத்துக்குச் சென்று தேநீர் அருந்தினார்.

சங்கம் ஓட்டலுக்கு திரும்பிய அவரை விவசாய சங்க பிரதிநிதிகளான கே.வி. இளங்கீரன், வெ. ஜீவக்குமார், தனபதி உள்ளிட்டோர் சந்தித்து கோரிக்கை மனுக்களை அளித்தனர். இந்த பிரசாரத்தின்போது பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, மக்களவை உறுப்பினர் எஸ். எஸ். பழனிமாணிக்கம், சட்டப்பேரவை உறுப்பினர்கள் துரை. சந்திரசேகரன், டி.கே.ஜி. நீலமேகம், தஞ்சாவூர் தொகுதி திமுக வேட்பாளர் ச. முரசொலி உள்ளிட்டோர் உடன் இருந்தனர். பிறகு 16 விவசாய அமைப்புகளை சேர்ந்த பிரதிநிதிகள், முதல்வர் ஸ்டாலினை சந்தித்து எம் எஸ் சுவாமிநாதன் பரிந்துரையை மத்திய அரசு அமல்படுத்த வலியுறுத்த வேண்டும், தமிழக நதிகளை இணைக்க வேண்டும் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி தங்களது ஆதரவுகளை தெரிவித்தனர்.

திருவாரூர் மாவட்டம் கொரடாச்சேரி அருகேயுள்ள ஊர்க்குடியில் இன்று மாலை நடைபெறும் பிரசார பொதுக் கூட்டத்தில் முதல்வர் பங்கேற்று தஞ்சாவூர் தொகுதி திமுக வேட்பாளர் ச. முரசொலியையும், நாகை தொகுதி இந்திய கம்யூனிஸ்ட் கட்சி வேட்பாளர் வை. செல்வராஜையும் அறிமுகப்படுத்தி பேசுகிறார்.

## இலங்கை கடற்படையினரால் மீனவர்கள் தொடர்ந்து கைது செய்யப்படுவதை கண்டித்து ராமேஸ்வரம் மீனவர்கள் இன்று முதல் காலவரையற்ற வேலைநிறுத்த போராட்டம்

சென்னை, 24 மார்ச் 2024: இலங்கை கடற்படையினரால் தமிழக மீனவர்கள் தொடர்ந்து கைது செய்யப்படுவதை கண்டித்து ராமேஸ்வரம் மீனவர்கள் இன்று முதல் காலவரையற்ற வேலைநிறுத்த போராட்டத்தில் இறங்கியுள்ளனர்.

தமிழகத்தில் ராமநாதபுரம், புதுக்கோட்டை, தஞ்சாவூர், நாகை உள்ளிட்ட மாவட்டங்களில் இருந்து கடலுக்கு மீன்பிடிக்க செல்லும் மீனவர்களை எல்லைதாண்டி வந்ததாக கூறி இலங்கை கடற்படையினர் தொடர்ந்து சிறைபிடித்து வருகிறார்கள். மேலும் நமது மீனவர்களிடம் இருந்து பறிமுதல் செய்யும் படகுகளையும் அந்நாடு அரசுடமையாக்கி வருவதால் மீனவர்கள் வாழ்வாதாரம் இழந்து தவிக்கின்றனர்.

இந்தநிலையில் மேசுவரத்தில் இருந்து நேற்று முன்தினம் மீன்பிடிக்க சென்ற 32 மீனவர்கள் மற்றும் 5 விசைப்படகுகளை இலங்கை கடற்படையினர் சிறைபிடித்தனர். இதில், படகுகள் பறிமுதல் செய்யப்பட்ட நிலையில் மீனவர்கள் மீது வழக்குப்பதிந்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி சிறையில் அடைக்கப்பட்டனர். இதனை கண்டித்தும், சிறையில் உள்ள அனைத்து மீனவர்கள் மற்றும் படகுகளை விடுவிக்க மத்திய அரசு நடவடிக்கை எடுக்கக்கோரி இன்று முதல் காலவரையற்ற வேலைநிறுத்த போராட்டத்தை தொடங்கி உள்ளனர். இதனால் இன்று யாரும் கடலுக்கு மீன்பிடிக்க செல்லவில்லை.

இதனைதொடர்ந்து, ராமேசுவரம் மீன்பிடி துறைமுகத்தில் 750-க்கும் மேற்பட்ட விசைப்படகுகள் கரைகளில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. மேலும் இதே கோரிக்கையை வலியுறுத்தி பாராளுமன்ற தேர்தல் புறக்கணிப்பு, ஏப்ரல் 8-ந்தேதி ஆதார் அட்டை, மீனவர் அடையாள அட்டை, குடும்ப அட்டை உள்ளிட்ட ஆவணங்களை மத்திய அரசிடம் ஒப்படைக்கும் போராட்டம் நடத்த உள்ளதாகவும் மீனவ சங்கத்தினர் அறிவித்துள்ளனர்.

இந்த போராட்டம் காரணமாக மீனவர்கள் மற்றும் மீன்பிடி தொழிலை சார்ந்து பிழைப்பு நடத்துபவர்கள் என சுமார் 70 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் கடுமையாக பாதிக்கப்பட்டு உள்ளனர். அதேபோல் தினந்தோறும் நடைபெறும் கோடிக்கணக்கான அளவிலான மீன்பிடி தொழில் வர்த்தகமும் முடங்கும் நிலை ஏற்பட்டுள்ளது. ஏற்கனவே கடந்த மாதம் இதேபோல் இலங்கை கடற்படையால் சிறைபிடிக்கப்பட்ட ராமேசுவரம் மீனவர்களை விடுதலை செய்யக்கோரி வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டவர்கள், உண்ணாவிரதமும் இருந்தனர். மேலும் ராமேசுவரத்தில் இருந்து கலெக்டர் அலுவலகத்திற்கு நடைபயணமும் மேற்கொண்டனர். அவர்களை தடுத்து நிறுத்தி சமரச பேச்சுவார்த்தை நடத்திய கலெக்டர் மற்றும் காதர் பாட்சா முத்துராமலிங்கம் எம்.எல்.ஏ. ஆகியோர் வேண்டுகோளை ஏற்று தற்காலிகமாக போராட்டம் கைவிடப்பட்டது. இந்த நிலையில் மீண்டும் மீண்டும் தமிழக மீனவர்கள் சிறைபிடிக்கப்பட்டு அவர்களும், அவர்களின் குடும்பத்தினரும் பல்வேறு இன்னலுக்கு ஆளாவதை தடுக்க மத்திய, மாநில அரசுகள் உறுதியான முடிவெடுக்க வேண்டும் என்று வலியுறுத்தி உள்ளனர்.

ஹலோ மிரர் மெட்ராஸ்
hellomadrasdaily@gmail.com தினசரி காலை நாளிதழ்
உள்ளது உள்ளபடி



# இன்றே தொகுதிகளில் தேர்தல் பணியில் மும்முரம் 40 தொகுதிகளுக்கும் அ.தி.மு.க. தேர்தல் பொறுப்பாளர்கள்: எடப்பாடி அறிவிப்பு



சென்னை, 24 மார்ச் 2024: தமிழ்நாடு மற்றும் புதுச்சேரியில் உள்ள 40 பாராளுமன்ற தொகுதிகளுக்கும் அண்ணா தி.மு.க. தேர்தல் பொறுப்பாளர்களை அண்ணா தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி நியமித்துள்ளார்.

ஒவ்வொரு தொகுதியிலும் மூத்த நிர்வாகிகள் மற்றும் மாவட்ட செயலாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள். அந்தந்த தொகுதிகளில் இன்றே இந்த குழுவினர் தேர்தல் பணியில் மும்முரமாக ஈடுபட்டனர்.

இது குறித்து எடப்பாடி பழனிசாமி இன்று வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

நாடாளுமன்ற மக்களவைப் பொதுத் தேர்தல் 19.4.2024 அன்று நடைபெற உள்ளதை முன்னிட்டு, அண்ணா தி.மு.க.வின் சார்பிலும், அதன் தலைமையிலான கூட்டணிக் கட்சிகளின் சார்பிலும் போட்டியிடும் வேட்பாளர்களுக்கு ஆதரவாக தேர்தல் பணிகளை மேற்கொள்வதற்காக, தமிழ் நாடு மற்றும் புதுச்சேரி உள்ளிட்ட

40 நாடாளுமன்ற மக்களவைத் தொகுதிகளுக்கும்; விளவங்கோடு சட்டமன்றத் தொகுதிக்கும், தேர்தல் பணிக்குழு பொறுப்பாளர்களாகக் கீழ்க்கண்ட வர்கள் கீழ்க்காணும் தொகுதிகளுக்கு நியமிக்கப்படுகிறார்கள்.

தலைமைக் கழகத்தில் இருந்து தேர்தல் பணிகளை முறைப்படுத்தும்

தேர்தல் பொறுப்பாளராக முன்னாள் அமைச்சர் சி. பொன்னையன் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

1. திருவள்ளூர் (தனி)

முன்னாள் எம்.பி. டாக்டர் பி. வேணுகோபால், முன்னாள் அமைச்சர்கள் அப்துல் ரஹீம், பி.வி.ரமணா, மாதவரம் வி. மூர்த்தி, மாவட்ட செயலாளர்கள் சிறுணியம் பி.பலராமன், வி. அலெக்சாண்டர்

2. வட சென்னை

முன்னாள் அமைச்சர் டி. ஜெயக்குமார், வட சென்னை மாவட்ட செயலாளர்கள் ஆர்.எஸ். ராஜேஷ், டி.ஜி. வெங்கடேஷ் பாபு

3. தென் சென்னை

முன்னாள் அமைச்சர் எஸ்.கோகுல இந்திரா, தென் சென்னை மாவட்ட செயலாளர்கள் விருகை வி.என்.ரவி, தி.நகர் பி. சத்தியா, எம்.கே. அசோக், சென்னை புறநகர் மாவட்ட செயலாளர் கே.பி. கந்தன்.

4. மத்திய சென்னை

அவைத் தலைவர் டாக்டர் அ. தமிழ்மகன் உசேன், வடசென்னை மாவட்ட செயலாளர் நா.பாலகங்கா, தென் சென்னை மாவட்ட செயலாளர் ஆதிராஜாராம், முன்னாள் எம்.பி. எஸ்.ஆர். விஜயகுமார், முன்னாள் அமைச்சர் எஸ். அப்துல் ரஹீம், ஒய். ஜவஹர் அலி

5. ஸ்ரீபெரும்புதூர்

முன்னாள் அமைச்சர்கள் பா. பெஞ்ஜமின், டி.கே.எம். சின்னையா, எஸ். அப்துல் ரஹீம், செங்கல்பட்டு மாவட்ட செயலாளர் சிட்லபாக்கம் ச. ராசேந்திரன், திருவள்ளூர் மாவட்ட செயலாளர் வி. அலெக்சாண்டர்

6. காஞ்சிபுரம் (தனி)

முன்னாள் அமைச்சர் பா. வளர்மதி, அமைப்புச் செயலாளர்கள் மைதிலி திருநாவுக்கரசு, வாலாஜாபாத் பா. கணேசன், காஞ்சிபுரம் மாவட்ட செயலாளர் வி. சோமசுந்தரம், செங்கல்பட்டு கிழக்கு மாவட்ட செயலாளர் திருக்கழுக்குன்றம் எஸ். ஆறுமுகம்

7. அரக்கோணம்

முன்னாள் அமைச்சர் கே.சி. வீரமணி, முன்னாள் எம்.பி. திருத்தணி கோ. அரி, அமைப்பு செயலாளர் வி. ராமு, ராணிப்பேட்டை மாவட்ட செயலாளர்கள் சு. ரவி, எஸ்.எம். சுகுமார்

8. வேலூர்

டாக்டர் மு. தம்பிதுரை, எம்.பி., முன்னாள் அமைச்சர் முக்கூர் என். சுப்பிரமணியன், கே.சி. வீரமணி, மாவட்ட செயலாளர்கள் எஸ்.ஆர்.கே.அப்பு, த. வேலழகன்

9. கிருஷ்ணகிரி

முன்னாள் அமைச்சர் கே.பி. முனுசாமி, மாவட்ட செயலாளர்கள் பி. பாலகிருஷ்ணா ரெட்டி, கே. அசோக்குமார்

10. தருமபுரி

முன்னாள் கே.பி. அன்பழகன், அண்ணா தொழிற்சங்கப் பேரவைச் செயலாளர் ஆர். கமலக்கண்ணன், விவசாயப் பிரிவுத் தலைவர் டி.ஆர். அன்பழகன், என் சந்திரசேகரன், எம்.பி

11. திருவண்ணாமலை

முன்னாள் அமைச்சர்கள் அக்ரி எஸ். எஸ். கிருஷ்ணமூர்த்தி, கே.சி. வீரமணி, எஸ். ராமச்சந்திரன்

12. ஆரணி

முன்னாள் அமைச்சர்கள் அக்ரி எஸ். எஸ். கிருஷ்ணமூர்த்தி, சேவூர் எஸ். ராமச்சந்திரன், செய்தித் தொடர்பாளர் ஆர். எம். பாபுமுருகவேல், வர்த்தக அணி இணைச் செயலாளர் வி.பன்னீர்செல்வம், மாவட்ட செயலாளர்கள் தூசி கே. மோகன், எல்.ஜெயசுதா,

13. விழுப்புரம் (தனி)

முன்னாள் அமைச்சர் சி.வி.சண்முகம், எம்.பி., முன்னாள் மத்திய அமைச்சர் செஞ்சி ந. ராமச்சந்திரன், வழக்கறிஞர் பிரிவு இணைச் செயலாளர் இ. பாலமுருகன்

14. கள்ளக்குறிச்சி

முன்னாள் அமைச்சர் ப. மோகன், அமைப்புச் செயலாளர் கே. சிங்காரம், சேலம் புறநகர் மாவட்ட செயலாளர் ஆர். இளங்கோவன், ஜெயலலிதா பேரவை இணைச் செயலாளர் ஏ.பிரபு

15. சேலம்

பாசறைச் செயலாளர் டாக்டர் வி.பி.பி. பரமசிவம், அமைப்பு சாரா ஓட்டுநர்கள் அணிச் செயலாளர் கா. சங்கரதாஸ், மாவட்ட செயலாளர்கள் ஆர். இளங்கோவன், ஜி. வெங்கடாஜலம், அனைத்துலக எம்.ஜி.ஆர். மன்ற துணைச் செயலாளர் எம்.கே. செல்வராஜ்

16. நாமக்கல்

முன்னாள் அமைச்சர்கள் பி.தங்கமணி, டாக்டர் வி. சரோஜா, அமைப்புச் செயலாளர்கள் எஸ். ராஜூ, எம்.எல்.ஏ.க்கள் எஸ். சுந்தரராஜன், எஸ். சேகர்

17. ஈரோடு

முன்னாள் அமைச்சர்கள் கே.ஏ. செங்கோட்டையன், பி. தங்கமணி, கே.வி. ராமலிங்கம், முன்னாள் எம்.பி. திருப்பூர் சி. சிவசாமி, அனைத்துலக எம்.ஜி.ஆர். மன்ற இணைச் செயலாளர் வி.பி. சிவசுப்பிரமணி,

18. திருப்பூர்

முன்னாள் அமைச்சர்கள் கே.ஏ. செங்கோட்டையன், எஸ்.பி.வேலுமணி, பொள்ளாச்சி வ. ஜெயராமன், கே.சி. கருப்பணன், எம்.எஸ்.எம். ஆனந்தன்,

19. நீலகிரி (தனி)

முன்னாள் அமைச்சர்கள் எஸ்.பி. வேலுமணி, ஏ.கே.செல்வராஜ், முன்னாள் சபாநாயகர் ப.தனபால், கோவை புறநகர் மாவட்ட செயலாளர் பி.ஆர்.ஜி. அருண்குமார், நீலகிரி மாவட்ட செயலாளர் கப்பச்சி னு. வினோத், வர்த்தக அணித் தலைவர் பி.பி.சஜீவன்

20. கோயம்புத்தூர்

முன்னாள் அமைச்சர்கள் எஸ்.பி. வேலுமணி, செ.ம.வேலுசாமி, கோவை புறநகர் மாவட்ட செயலாளர் பி. ஆர். ஜி. அருண்குமார், மாநகர் மாவட்ட செயலாளர் அம்மன் கே. அர்ச்சுணன்

21. பொள்ளாச்சி

முன்னாள் அமைச்சர்கள் எஸ்.பி. வேலுமணி, பொள்ளாச்சி வ. ஜெயராமன், உடுமலை கே. ராதாகிருஷ்ணன், செ. தாமோதரன், திருப்பூர் புறநகர் மாவட்ட செயலாளர் சி. மகேந்திரன்

22. திண்டுக்கல்

முன்னாள் அமைச்சர்கள் திண்டுக்கல் சி. சீனிவாசன், நத்தம் இரா. விசுவநாதன், அமைப்புச் செயலாளர் வி.மருதராஜ், பேரவை இணைச் செயலாளர் ஆர்.வி.என். கண்ணன்

23. கரூர்

முன்னாள் அமைச்சர் கரூர் எம். சின்னசாமி, டாக்டர் சி. விஜயபாஸ்கர், எம்.ஆர். விஜயபாஸ்கர், பாசறை செயலாளர் விபிபி. பரமசிவம்

24. திருச்சிராப்பள்ளி

முன்னாள் அமைச்சர்கள் டாக்டர் சி. விஜயபாஸ்கர், எஸ். வளர்மதி, அமைப்புச் செயலாளர்கள் டி. ரத்தினவேல், ஆர். மனோகரன், முன்னாள் எம்.பி. ப. குமார், திருச்சி மாநகர் மாவட்ட செயலாளர் ஜெ. சீனிவாசன்

25. பெரம்பலூர்

முன்னாள் அமைச்சர்கள் பி. தங்கமணி, ப. மோகன், என்.ஆர். சிவபதி, வரகூர் அ. அருணாசலம், எம். பரஞ்ஜோதி, அண்ணா தொழிற்சங்கப் பேரவைத் தலைவர் தாடி ம. இராசு, கொள்கை பரப்பு துணைச் செயலாளர் ஆ. இளவரசன், மாவட்ட செயலாளர் இளம்பை இரா. தமிழ்ச்செல்வன்,

26. கடலூர்

முன்னாள் அமைச்சர்கள் சி.வி. சண்முகம், எம்.சி. சம்பத், கடலூர் மாவட்ட செயலாளர்கள் சொரத்தூர் இரா. ராஜேந்திரன், ஆ. அருண்மொழிதேவன், அண்ணா தொழிற்சங்கப் பேரவை இணைச் செயலாளர் கோ. சூரியமூர்த்தி

27. சிதம்பரம் (தனி)

முன்னாள் அமைச்சர்கள் செ. செம்மலை, வரகூர் அ. அருணாசலம், கே.ஏ.ஜெயபால், எம்.சி. தாமோதரன், அமைப்பு செயலாளர்கள் என். முருகுமாறன், அரியலூர் மாவட்ட செயலாளர் தாமரை எஸ். ராஜேந்திரன், கடலூர் மாவட்ட செயலாளர்கள் ஆ. அருண்மொழிதேவன், கே.ஏ. பாண்டியன்

28. மயிலாடுதுறை

முன்னாள் அமைச்சர் ஓ.எஸ். மணியன், அமைப்புச் செயலாளர்கள் எஸ்.ஆசைமணி, ஆர். காந்தி, மயிலாடுதுறை மாவட்ட செயலாளர் எஸ். பவுன்ராஜ், தஞ்சாவூர் கிழக்கு மாவட்ட செயலாளர் ஆர்.கே. பாரதிமோகன்

29. நாகப்பட்டினம் (தனி)

முன்னாள் அமைச்சர்கள் ஆர். காமராஜ், ஓ.எஸ். மணியன், கே.ஏ. ஜெயபால், ஆர்.ஜீவானந்தம், அமைப்புச் செயலாளர்கள் டாக்டர் கே. கோபால், சிவா. ராஜமாணிக்கம், துரை. செந்தில்

30. தஞ்சாவூர்

முன்னாள் அமைச்சர் ஆர். காமராஜ், அமைப்புச் செயலாளர்கள் ஆர். காந்தி, துரை. செந்தில், கொள்கை பரப்பு துணைச் செயலாளர் துரை திருஞானம், தஞ்சாவூர் மாவட்ட செயலாளர்கள் சி.வி. சேகர், எம். சேகர், எம். ரெத்தினசாமி, என்.எஸ். சரவணன்

31. சிவகங்கை

அமைப்புச் செயலாளர் வி.வி. ராஜன் செல்லப்பா, முன்னாள் அமைச்சர்கள் ஜி.பாஸ்கரன், எம். ராதாகிருஷ்ணன், சிவகங்கை மாவட்ட செயலாளர் பி.ஆர். செந்தில்நாதன், புதுக்கோட்டை தெற்கு மாவட்ட செயலாளர் பி.கே. வைரமுத்து

32. மதுரை

முன்னாள் அமைச்சர்கள் நத்தம் இரா. விசுவநாதன், செல்லூர் கே. ராஜூ, அமைப்புச் செயலாளர் வி.வி. ராஜன் செல்லப்பா, தகவல் தொழில்நுட்பப் பிரிவுச் செயலாளர் விவிஆர். ராஜ் சத்யன், அனைத்துலக எம்.ஜி.ஆர். மன்ற துணைச் செயலாளர் எம்.எஸ். பாண்டியன், பேரவை இணைச் செயலாளர் கே.ஏ.கே. முகில்

33. தேனி

முன்னாள் அமைச்சர் ஆர்.பி. உதயகுமார், அமைப்புச் செயலாளர்கள் எஸ்.டி. ஜக்கையன், ஐ. மகேந்திரன், தேனி கிழக்கு மாவட்ட செயலாளர் முருக்கோடை எம்.பி. ராமர், அனைத்துலக எம்.ஜி.ஆர். மன்ற இணைச் செயலாளர் ஆர். பார்த்திபன், அனைத்துலக எம்.ஜி.ஆர். மன்ற இணைச் செயலாளர் கி. மாணிக்கம்,

34. விருதுநகர்

முன்னாள் அமைச்சர் கே.டி. ராஜேந்திரபாலாஜி, அமைப்புச் செயலாளர் வி.வி. ராஜன் செல்லப்பா, விருதுநகர் கிழக்கு மாவட்ட செயலாளர் ஆர்.கே. ரவிச்சந்திரன்

35. ராமநாதபுரம்

முன்னாள் அமைச்சர்கள் ஆர்.பி. உதயகுமார், கே.டி. ராஜேந்திரபாலாஜி, அ. அன்வர்ராஜா, எம். மணிகண்டன், மகளிர் அணி இணைச் செயலாளர் கீர்த்திகா முனியசாமி, ராமநாதபுரம் மாவட்ட செயலாளர் எம்.ஏ. முனியசாமி, விருதுநகர் கிழக்கு மாவட்ட செயலாளர் ஆர்.கே. ரவிச்சந்திரன்

36. தூத்துக்குடி

முன்னாள் அமைச்சர்கள் கடம்பூர் ஆர். ராஜூ, எஸ்.பி. சண்முகநாதன், சி.த. செல்லப்பாண்டியன், மா.பா. பாண்டியராஜன், அமைப்புச் செயலாளர் என். சின்னத்துரை

37. தென்காசி (தனி)

முன்னாள் அமைச்சர் வி.எம். ராஜலெட்சுமி, கொள்கை பரப்பு துணைச் செயலாளர் பாப்புலர் வி. முத்தையா, தென்காசி மாவட்ட செயலாளர்கள் சி. கிருஷ்ணமுரளி, எஸ். செல்வமோகன்தாஸ்பாண்டியன்

38. திருநெல்வேலி

முன்னாள் அமைச்சர் இசக்கி சுப்பையா, வழக்கறிஞர் பிரிவுச் செயலாளர் ஐ.எஸ். இன்பதுரை, அமைப்புச் செயலாளர்கள் சுதா கே. பரமசிவன், பி.ஜி. ராஜேந்திரன், ஏ.கே. சீனிவாசன், திருநெல்வேலி மாநகர் மாவட்ட செயலாளர் தச்சை என். கணேசராஜா, சிறுபான்மையினர் நலப் பிரிவு துணைத் தலைவர் பூலாங்கால் எச். சித்திக்

39. கன்னியாகுமரி நாடாளுமன்றம் மற்றும் விளவங்கோடு சட்டமன்றத் தொகுதி:

முன்னாள் அமைச்சர்கள் என். தளவாய்சுந்தரம், கே.டி. பச்சைமால், அமைப்புச் செயலாளர் ஏ.கே. சீனிவாசன், கன்னியாகுமரி மேற்கு மாவட்ட செயலாளர் டி. ஜாண்தங்கம்

40. புதுச்சேரி

முன்னாள் அமைச்சர்கள் சி.வி. சண்முகம், ஆர். காமராஜ், எம்.சி. சம்பத், வழக்கறிஞர் பிரிவுத் தலைவர் வி.எஸ். சேதுராமன், புதுச்சேரி மாநில செயலாளர் ஏ. அன்பழகன், காரைக்கால் மாவட்ட செயலாளர் வி. ஓமலிங்கம், புதுச்சேரி மாநில துணைச் செயலாளர் வையாபுரி மணிகண்டன், மாநில புரட்சித் தலைவி பேரவைச் செயலாளர் ஏ.பாஸ்கரன்.

தற்போது அறிவிக்கப்பட்டுள்ள நாடாளுமன்றத் தொகுதிகளுக்கான தேர்தல் பணிக்குழு பொறுப்பாளர்கள் அனைவரும், இன்று முதலே சம்பந்தப்பட்ட தொகுதிகளுக்குச் சென்று தங்களுடைய தேர்தல் பணிகளைத் தொடங்கிடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

தேர்தல் பணிக்குழு பொறுப்பாளர்களுக்கு, சம்பந்தப்பட்ட நாடாளுமன்றத் தொகுதிகளைச் சேர்ந்த தலைமை செயலாளர்கள், மாவட்ட செயலாளர்கள், கழக நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், கழக சார்பு அமைப்புகளின் துணை நிர்வாகிகள், முன்னாள் அமைச்சர்கள், முன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மாவட்ட நிர்வாகிகள், மாவட்ட சார்பு அமைப்புகளின் நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூராட்சி மற்றும் பகுதி செயலாளர்கள், நிர்வாகிகள்; கிளை, வார்டு, வட்ட அளவில் கழகத்தில் பல்வேறு நிலைகளில் பணியாற்றி வரும் நிர்வாகிகளும், கழக உடன்பிறப்புகளும் முழு ஒத்துழைப்பு நல்கி, சிறந்த முறையில் தேர்தல் பணியாற்றி, கழக வேட்பாளர்களின் வெற்றியையும், தோழமைக் கட்சிகளின் சார்பில் போட்டியிடும் வேட்பாளர்களின் வெற்றியையும் உறுதி செய்திட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு எடப்பாடி பழனிசாமி கூறியுள்ளார்.

"printed by R.SATHYANARAYANAN and published by R.SATHYANARAYANAN on behalf of R.SATHYANARAYANAN and printed at Chennai Offset Printers No.19/1, 21/2, Kitabath Khan Bhandur street, Ellis Road, Chennai-600 002, and published at No.11, South Perumal Koil Street, Vadapalani, Chennai - 600 026 Editor R.SATHYANARAYANAN"

ஹலோ மெட்ராஸ்
hellomadrasdaily@gmail.com தினசரி காலை நாளிதழ்
உள்ளது உள்ளபடி



# புதுச்சேரி துணைநிலை கவர்னராக சி.பி.ராதாகிருஷ்ணன் பதவியேற்றார்



சென்னை, 24 மார்ச் 2024: தெலுங்கானா மற்றும் புதுவை துணைநிலை ஆளுநராக பொறுப்பு வகித்து வந்த தமிழிசை சவுந்தரராஜன் நாடாளுமன்ற தேர்தலில் போட்டியிடுவதற்காக தனது பதவியை கடந்த வாரம் ராஜினாமா செய்தார். அவரது ராஜினாமா கடிதத்தை ஜனாதிபதி திரவுபதி முர்மு ஏற்றுக் கொண்டார். இதையடுத்து ஜார்க்கண்ட் கவர்னர் சி.பி.ராதாகிருஷ்ணன் கூடுதலாக பொறுப்பாக தெலுங்கானா மற்றும் புதுச்சேரி துணைநிலை கவர்னர் பொறுப்பை வகிப்பார் என தெரிவிக்கப்பட்டது.

இந்த நிலையில் தெலுங்கானா கவர்னராக கடந்த 2 நாட்களுக்கும் முன்னர் சி.பி. ராதாகிருஷ்ணன் பதவி ஏற்றுக்கொண்டார். நேற்று புதுச்சேரி துணைநிலை கவர்னராக சி.பி.ராதாகிருஷ்ணன் பதவியேற்றார். அவருக்கு சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி சஞ்சய் வி.கங்காபுர்வாலா பதவிப் பிரமாணம் செய்து வைத்தார். சி.பி.ராதாகிருஷ்ணனுக்கு முதலமைச்சர் என்.ரங்கசாமி பொன்னாடை அணிவித்து நினைவுப் பரிசு வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் புதுவை சபாநாயகர் ஆர்.செல்வம், அமைச்சர்கள் லட்சுமி நாராயணன், தேனி சி.ஜெயக்குமார், சாய் ஜெ. சரவணன்குமார், என்.திருமுருகன், தலைமை செயலர் சரத் சவுஹான் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

முன்னதாக சி.பி.ராதாகிருஷ்ண் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

'கவனருக்கான அதிகாரத்தின்படி மக்கள் நலத்திட்டங்களை முழுமையாக மேற்கொள்வேன். மக்களுக்கு பயனிள்கும் வகையில் புதுவை அரசுக்கு முழுமையாக ஒத்துழைப்பேன். மாநிலத்தின் முன்னேற்றத்துக்கு மட்டுக்கட்டையாக இருக்க மாட்டேன். எனது அலுவலகத்தில் கோப்புகள் காத்திருக்கும் நிலையை அனுமதிக்கமாட்டேன். அரசியல் சாசனத்துக்கு எதிரான கோப்புகளுக்கு ஒப்புதல் அளிக்க மாட்டேன். இவ்வாறு அவர் கூறினார்.

# லிங்க்ட்இன்- இல் வலுவான நெட்வொர்க்கை உருவாக்க 6 குறிப்புகள்

சென்னை, 24 மார்ச் 2024: உயர்தர உலகில், ஒரு வலுவான தொழில்முறை நெட்வொர்க்கின் மதிப்பை ஒருபோதும் மிகைப்படுத்த முடியாது. இது வேலையை தேடும் போது மட்டும் அல்லாமல், உங்கள் வாழ்க்கைப் பயணம் முழுவதும் பல கட்டங்களில் உங்கள் நெட்வொர்க் உங்களை ஆதரிக்கும் - அதாவது அர்த்தமுள்ள அறிவு பரிமாற்றம், உங்கள் துறையில் புதுமைகள் அல்லது உங்கள் தொழில்முறை இலக்குகளை அடைவதற்கான வழிகாட்டுதல் போன்றவையாகும் .இந்தியாவில் உள்ள 83% தொழில் வல்லுநர்கள், வாய்ப்புகளைக் கண்டறிந்து, தங்கள் தொழிலை உயர்த்திக் கொள்வதற்கான ஒரு வழியாகத் தங்கள் நெட்வொர்க்கை வளர்த்துக் கொள்ள விரும்புவதாக லிவீஸீளீமீபீமிஸீ இன் சமீபத்திய ஆராய்ச்சி காட்டுகிறது. எங்கு தொடங்குவது என்று உங்களுக்குத் தெரியாவிட்டால், வலுவான தொழில்முறை நெட்வொர்க்கை உருவாக்க லிங்க்ட்இன்-ஐ எவ்வாறு பயன்படுத்தலாம் என்பதற்கான சில குறிப்புகள் இங்கே கொடுக்கப்பட்டுள்ளன :

1. 'மை நெட்வொர்க்' உடன் உங்கள் இணைப்புகளை விரிவுபடுத்தவும்: சரியான நபர்களுடன் தொடர்புகொள்வதற்கும் , உரையாடலைத் தூண்டுவதற்கான வழிகளைக் கண்டறிய உங்களுக்கு உதவுவதற்கும், லிங்க்ட்இன் ஆனது உங்கள் நெட்வொர்க் டாப்-ஐப் பார்வையிடும்போது இரண்டு-டாப் அனுபவத்தை வழங்குகிறது ஸ்ரீ "க்ரோ" டாப் உங்களின் தற்போதைய இணைப்புகளை நிர்வகிக்க உதவுவதிலும், உங்கள் நெட்வொர்க்கில் சேர்க்க 'உங்களுக்குத் தெரிந்த நபர்களுடன்' தொடர்புடைய நபர்களைக் கண்டறிவதிலும் கவனம் செலுத்துகிறது. உங்கள் இணைப்புகள் புதிய நிகழ்ச்சியைத் தொடங்கும் போது, பணி ஆண்டு விழாவைக் கொண்டாடும், பணியமர்த்தப்படுவதை அறிவிக்கும் அல்லது பிறந்தநாளைக் கொண்டாடும் போது உங்களுக்குத் தெரிவிப்பதில் "காட்ச் அப்" டாப் கவனம் செலுத்துகிறது. அந்த வகையில், அவர்களை வாழ்த்துவதற்கு நீங்கள் அணுகலாம், மேலும் உரையாடலை மீண்டும் ஈடுபட அல்லது தொடர அதை ஒரு தருணமாகப் பயன்படுத்தலாம்.

2. தனிப்பட்ட செய்திகளுடன் 'ஹாய்' சொல்லுங்கள்: அர்த்தமுள்ள இணைப்புகள் உரையாடல்களுடன் தொடங்குகின்றன. 'மெசேஜ்' டாப் சென்று நீங்கள் தொடர்பு கொள்ள விரும்பும் இணைப்பைத் தேடுவதன் மூலம் நீங்கள் தொடங்கலாம். அல்லது, நீங்கள் அவர்களின் சுயவிவரங்களுக்குச் சென்று, 'மெசேஜ் ' பொத்தானைக் கிளிக் செய்வதன் மூலம் செல்லலாம்! உங்களிடம் பிரீமியம் சந்தா இருந்தால், நீங்கள் அவர்களுடன் (இன்னும்!) இணைக்கப்படாவிட்டாலும் நேரடியாக மக்களுக்கு செய்தி அனுப்ப இன்மெயில் அம்சத்தைப் பயன்படுத்தலாம்

3. கருத்துக்கள் (கண்டெண்ட்) மூலம் ஈடுபடுங்கள்: உங்கள் எண்ணங்கள், அனுபவங்கள் மற்றும் கற்றல்களை உங்கள் நெட்வொர்க்குடன் பகிர்வதன் மூலம் அவர்கள் உங்களைப் பற்றி அதிகம் பார்க்கவும், உங்களை நன்கு அறிந்து கொள்ளவும், படிப்படியாக உங்கள் மீது ஆர்வம் காட்டவும் செய்கிறது. வழக்கமான கருத்துக்களை செயல்படுத்த - ஒரு பணி செயல்பாட்டின் போது செய்யப்பட்ட கணிப்புகள் அல்லது சமீபத்திய தொழில் போக்குகள் குறித்த உங்கள் கருத்துகளை தெரியப்படுத்தலாம் . உங்கள் இணைப்புகளை ஊக்குவிக்க மறக்காதீர்கள். லிங்க்ட்இன்-இல் உள்ள கருத்துக்கணிப்புகள் உங்கள் நெட்வொர்க்கில் இருந்து நுண்ணறிவுகளைப் பெறுவதற்கும் உரையாடலைப் பெறுவதற்கும் ஒரு சிறந்த வழியாகும்!

4. லிங்க்ட்இன்-குழுக்களில் சேரவும்: லிங்க்ட்இன்- இல் உள்ள குழுக்களின் மூலம், அதே தொழில்துறையைச் சேர்ந்த அல்லது உங்களைப் போன்ற பாடங்களில் ஆர்வமுள்ள இருங்கிணைந்த எண்ணம் கொண்ட நிபுணர்களின் சமூகத்தை நீங்கள் காணலாம். உரையாடல்களைத் தொடங்கவும், வழிகாட்டுதலைப் பெறவும், தொழில்துறையின் சமீபத்திய தகவல்களுடன் புதுப்பித்த நிலையில் இருக்கவும் இந்த தொழில்முறை குழுக்களைப் பயன்படுத்தலாம்.

5. உரையாடல்கள் மற்றும் அறிவு உருவாக்கத்தில் பங்களிக்கவும்: ஒத்துழைப்பை விட மக்களை நெருக்கமாகக் கொண்டுவருவது எதுவுமில்லை. குறிப்பாக லிங்க்ட்இன் போன்ற தொழில்முறை நெட்வொர்க்கிங் தளங்களில், பயனடைய ஏராளமான நிபுணத்துவம் உள்ளது. லிங்க்ட்இன்- இன் ஏஐ-இயங்கும் கூட்டுக் கட்டுரைகள் மூலம், கலந்துரையாடல் களத்தில் உள்ள மற்ற நிபுணர்களுடன் எண்ணங்களைப் பரிமாறிக் கொள்ளும்போது, நடந்துகொண்டிருக்கும் உரையாடலுக்கு மதிப்பினை நீங்கள் கூடலாம் .

6. உங்கள் நெட்வொர்க்கிற்கான ஆதரவை வழங்குங்கள்: ஒரு ஆரோக்கியமான நெட்வொர்க் பரஸ்பர வளர்ச்சியில் செழித்து வளர்கிறது, அதனால் அனைவரும் மற்றவர்களிடமிருந்து கற்றுக்கொள்கிறார்கள் . உங்கள் இணைப்புகளின் கருத்துகளை அவர்கள் பார்க்கவும் மதிப்புள்ளதாகவும் உணரச் செய்யவும், மறுபதிவு செய்வதன் மூலம் அதைப் பெருக்கலாம் ,மற்றும் தேடுபவர்களுடன் வாய்ப்புகளைப் பகிரவும் (உதாரணமாக, உறுப்பினர்கள் அவர்கள் 'ஓபன் டூ வொர்க்' என்று தெரிவிக்கும் போது). லிங்க்ட் இனில் 'கமெண்டிங் ஃபார் பெட்டர் ரீச்' உறுப்பினர்களிடையே அவர்களிடம் நீங்கள் காணக்கூடிய மிகவும் பயனுள்ள மற்றும் உண்மையான ஆதரவில் ஒன்றாகும்.

# ஓரியண்ட் எலக்ட்ரீக் நிறுவனத்தின் சிஎஸ்ஆர் முன்முயற்சியான உஜ்வல் திட்டத்தின் மூலம் 5000 மின் பணியாளர்களுக்கு திறன் மேம்பாட்டு பயிற்சி வழங்கப்படவுள்ளது



சென்னை, 24 மார்ச் 2024: பல்வேறு நிறுவனங்களை உள்ளடக்கிய, 2.9 பில்லியன் அமெரிக்க டாலர் மதிப்பிலான சிகே பிர்லா குழுமத்தின் ஒரு அங்கமான ஓரியண்ட் எலக்ட்ரீக் லிமிடெட் நிறுவனம் - சமீபத்தில் டிஈஈ அறக்கட்டளையுடன் இணைந்து, கார்ப்பரேட் சமூகப் பொறுப்புணர்வின் (சிஎஸ்ஆர்) மீது அந்நிறுவனத்திற்கு உள்ள அர்ப்பணிப்பை வெளிப்படுத்தும் விதமாக மின் பணியாளர்களுக்கு / எலக்ட்ரீஷியன்களுக்கு விரிவான முறையில் திறன் மேம்பாட்டு பயிற்சிகளை வழங்குவதற்காக 'உஜ்வல்' என்கிற திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. 2024 நிதியாண்டில் நாடு முழுவதும் 5000 எலக்ட்ரீஷியன்களின் திறனை மேம்படுத்த வேண்டும் என்பதே இந்த என்எஸ்டிசி - சான்றளிக்கப்பட்ட இத்திட்டதின் நோக்கமாகும்., சமூகங்களை மேம்படுத்துவதிலும், தொழில்துறையில் நிரப்பப்பட வேண்டிய திறன் இடைவெளியைக் குறைப்பதிலும் ஓரியண்ட் எலக்ட்ரிக் நிறுவனம் கொண்டுள்ள அர்ப்பணிப்பை எட்டுத்துக்காட்டும் விதமாக இந்த முன்முயற்சியை மேற்கொண்டுள்ளது.

ஓரியண்ட் எலக்ட்ரிக் லிமிடெட் நிறுவனத்தின் வைஸ் சேர்மன், & நிர்வாக இயக்குனர் திரு. தீபக் கேத்ரபால் அவர்கள் கூறுகையில், "எலக்ட்ரீஷியன்கள் நமது தினசரி வாழ்க்கையின் நிஜ ஹீரோக்களைப் போன்றவர்கள் ஸ்ரீ நமது வீடுகள், அலுவலகங்கள் மற்றும் தொழிற்சாலைகள் என அனைத்தும் தங்குதடையின்றி செயல்படுவதற்கு அவர்கள் முக்கிய பங்கு வகிப்பதாக நாங்கள் நம்புகிறோம். எனவே, எலக்ட்ரிக் தொழில்துறையை சேர்ந்த ஒரு நிறுவனமாக ஸ்ரீ அவர்களின் திறன்களை மேம்படுத்தும் முன்முயற்சிகள் மூலம் அவர்கள் வாழ்வினை முன்னேற்றுவதையும், சிறப்பாக செயலாற்ற அவர்களுக்கு அதிகாரமளிப்பதையும் நாங்கள் கடமையாகக் கருதுகிறோம். எங்களது சிஎஸ்ஆர் முன்முயற்சியான 'உஜ்வல்' திட்டம் மூலம் அந்த கடமையை நிறைவேற்றும் திசையில் நாங்கள் ஒரு படி முன்னே சென்றுள்ளோம். இதன் மூலம் மின் பணியாளர் சமூகங்களுக்கு செயலாற்றலை அளிக்க வேண்டும் என்கிற எங்களது நிலைப்பாட்டிற்கு மேலும் வலு சேர்த்துள்ளோம். எங்கள் இலக்கில் நாங்கள் தெளிவாக இருக்கிறோம் - அதாவது எலக்ட்ரீஷியன் சமூகத்தை மேம்படுத்துவது, அவர்களுக்குத் தேவையான பயிற்சிகளை வழங்குவது மற்றும் அவர்களுக்கான அங்கீகாரத்தை பெற்றுத் தருவது. இத்திட்டம், எங்களது நிறுவனத்தின் நன்மதிப்புகளுடன் ஒத்துப்போவதாக மட்டுமில்லாமல், இத்தொழில்துறையில் உள்ள திறன் இடைவெளியை நிரப்ப வேண்டும் என்கிற பெரிய இலக்கிற்கும் பங்களிக்கிறது. இத்திட்டத்தின் மூலம், எலக்ட்ரீஷியன்களுக்கு ஒரு பிரகாசமான மற்றும் மகிழ்ச்சியான எதிர்காலத்தை உருவாக்க முடியுமென நாங்கள் நம்புகிறோம்," என்று தெரிவித்தார்.

இத்திட்டத்தின் மூலம் டெல்லி, மும்பை, சென்னை, மீரட், கான்பூர், லக்னோ, காஸியாபாத், கோயம்புத்தூர், திருச்சி, புனே, நாக்பூர், ஜெய்ப்பூர், பிகானேர், ஜோத்பூர், பாட்னா மற்றும் முஸாஃப்பர்பூர் உள்ளிட்ட இந்தியாவின் பல்வேறு இடங்களில் பயலரங்கங்களுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்தியா முழுவதிலும் நிகழவுள்ளதால் பல்வேறு பின்புலங்கள் மற்றும் பிராந்தியங்களைச் சேர்ந்த எலக்ட்ரீஷியன்கள் இந்த முன்முயற்சியினால் பயனடைவார்கள் என்பதை உறுதியாக கூறலாம். நாடு முழுவதும் மிகவும் திறமையான மற்றும் செயலாற்றல் மிக்க பணியாளர்களை உருவாக்குவதற்கு இத்திட்டம் பங்களிக்கிறது.

ஒவ்வொரு பயிலரங்கையும், சான்றளிக்கப்பட்ட மற்றும் அனுபவம் வாய்ந்த பயிற்சியாளர்கள் வழிநடத்துவார்கள் - மின்துறை சார்ந்த வர்த்தகம், தனிநபர் திறன்கள், டிஜிட்டல் மற்றும் நிதி கல்வியறிவு போன்ற முக்கியமான பிரிவுகளில் அதிக கவனம் செலுத்துவார்கள். எலக்ட்ரீஷியன்களை விரிவான திறன்களுடன் தயார்படுத்துவதன் மூலம், அவர்களின் வேலைவாய்ப்பை மேம்படுத்தி, நீண்டகால வெற்றிக்குத் தேவையான செயலாற்றலை வழங்குவதை இந்த சி எஸ் ஆர் திட்டம் அதன் நோக்கமாகக் கொண்டுள்ளது. பயிற்சியை வெற்றிகரமாக முடித்த பிறகு எலக்ட்ரீஷியன்கள் 'ஸ்கில் இந்தியா'-வின் சான்றிதழைப் பெறலாம்.

# சென்னையில் இருந்து வெளிநாட்டில் படிக்க விரும்புவர்களின் எண்ணிக்கையில் அபரிமீதமான வளர்ச்சியை கிரிம்சன் காண்கிறது

சென்னை, 24 மார்ச் 2024: உலகின் முன்னணி கல்லூரி சேர்க்கை ஆலோசகரான கிரிம்சன் எஜுகேஷன், சென்னையில் இருந்து வருபவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதுடன், தமிழகத்தில் வெளிநாட்டில் படிக்க விரும்புவோர் எண்ணிக்கையில் கணிசமான அதிகரிப்பை அறிவித்தது. கடந்த கல்விச் சுழற்சியில் தமிழ்நாட்டில் இருந்து கிரிம்சன் கல்வியில் சேரும் மாணவர்களின் எண்ணிக்கையில் 250% வளர்ச்சியை நிறுவனம் கண்டுள்ளது. அதைத் தொடர்ந்து கடந்த ஓராண்டில் 100% வளர்ச்சியுடன் மும்பை நகரம் உள்ளது. இந்த எழுச்சி சர்வதேச கல்வி வாய்ப்புகளை நாடும் மாணவர்களின் வளர்ந்து வரும் போக்கை பிரதிபலிக்கிறது மற்றும் அவர்களின் கல்வி பயணங்களை எளிதாக்குவதில் கிரிம்சனின் முக்கிய பங்கை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது. சென்னையிலிருந்து வெளிநாட்டில் படிக்க விரும்புபவர்களின் அதிகரிப்புக்கு சர்வதேச கல்வி பற்றிய விழிப்புணர்வு அதிகரிப்பு, பல்வேறு கலாச்சாரங்களை வெளிப்படுத்துவதற்கான விருப்பம் மற்றும் ஆர்வமுள்ளவர்களிடையே உயர்தர, ஆராய்ச்சி சார்ந்த கல்வித் திட்டங்களுக்கான வளர்ந்து வரும் தேவை உள்ளிட்ட பல காரணிகள் காரணமாக இருக்கலாம். கடந்த கல்விச் சுழற்சியில், கிரிம்ஸன் எஜுகேஷன் தமிழ்நாட்டைச் சேர்ந்த தங்கள் மாணவர்களுக்கு முன்னணி அமெரிக்க மற்றும் இங்கிலாந்து பல்கலைக்கழகங்களில் சேர்க்கையைப் பெறுவதில் வெற்றிகரமாக ஆதரவளித்தது. தமிழ்நாட்டைச் சேர்ந்த 41% மாணவர்களும் முதன்மையான 10 அமெரிக்கப் பல்கலைக்கழகங்கள், பென்சில்வேனியா பல்கலைக்கழகம், ஸ்டான்போர்ட் பல்கலைக்கழகம் ஜார்ஜியா டெக் மற்றும் 100% முதன்மையான 30 இடங்களில் சேர்க்கையைப் பெற்றுள்ளனர்.

கிரிம்ஸன் எஜுகேஷன், இந்த உருமாறும் பயணத்தின் மூலம் மாணவர்களுக்கு வழிகாட்டுவதில் முன்னணியில் உள்ளது, ஒவ்வொரு மாணவரின் தனிப்பட்ட இலக்குகள் மற்றும் லட்சியங்களுக்கு ஏற்ப தனிப்பயனாக்கப்பட்ட ஆலோசனை சேவைகளை வழங்குகிறது. நிறுவனம் ஹார்வர்ட் மற்றும் ஸ்டான்போர்ட் போன்ற புகழ்பெற்ற பல்கலைக்கழகங்களின் முன்னாள் சேர்க்கை அதிகாரிகளின் நிபுணத்துவத்தைப் பயன்படுத்தி, அவர்களின் வெளிநாட்டுப் பயணத்தின் ஒவ்வொரு அடியிலும் மாணவர்களை வழிநடத்துகிறது, அவர்களின் முழுமையான கல்லூரி விண்ணப்பத்தை சீரமைக்கிறது, எனவே மாணவர்கள் இந்த போட்டி சேர்க்கை விளையாட்டில் தங்கள் சிறந்த கால்களை முன்வைக்க முடியும். ஹார்வர்டு பல்கலைக்கழகத்தின் முன்னாள் சேர்க்கை அதிகாரியும், கிரிம்ஸன் எஜுகேஷனின் ஐவி லீக் சேர்க்கை ஆலோசகருமான பெனிட்டோ ரோட்ரிக்ஸ் சென்னையில் இன்று செய்தியாளர்களிடம் பேசுகையில், ""இன்றைய போட்டி நிறைந்த கல்வி சூழலில், மாணவர்கள் தங்களைத் தனித்து நிற்க வைக்க வேண்டும். கல்விசார் சிறப்பை அடித்தளமாக கொண்டு, பாடத்திற்கு அப்பாற்பட்டவற்றில் மற்றும் தலைமைப் பணிகளில் ஆர்வத்தை வெளிப்படுத்துவதன் மூலம், வற்புறுத்துகிற தனிப்பட்ட அறிக்கையை உருவாக்குதல் மற்றும் நிலையான சமூக தாக்கம் சார்ந்த தன்னார்வத் தொண்டு ஆகியவற்றின் மூலம், மாணவர்கள் ஐவிஒய் லீக் கல்லூரியில் சேருவதற்கான வாய்ப்புகளை அதிகரித்து, அவர்களின் கல்விப் பயணத்தில் மாற்றத்திற்கு வழி வகுக்க முடியும்." இந்தியாவில், மகாராஷ்டிரா, கர்நாடகா, ஆந்திரப் பிரதேசம் மற்றும் பஞ்சாப் போன்ற பிற பகுதிகளைச் சேர்ந்த வெளிநாடுகளில் படிக்க விரும்புவோரில் வளர்ச்சியைக் கண்டது கிரிம்ஸன் எஜுகேஷன். 2022-2023 ஆம் ஆண்டின் முந்தைய சேர்க்கை சுழற்சியின் போது, ஸ்டான்போர்ட், கார்னெல், எம்ஐடி, கால்டெக், டியூக், சிகாகோ, ஜான்ஸ் ஹாப்கின்ஸ் மற்றும் யுசிஎல்ஏ, வடமேற்கு மற்றும் பலவற்றோடு அமெரிக்காவின் முதல் 10 பல்கலைக்கழகங்களில் சேர்க்கை பெறுவதில், நிறுவனம் உலகளவில் 700க்கும் மேற்பட்ட மாணவர்களை வெற்றிகரமாக ஆதரித்தது.

கிரிம்சன் எஜுகேஷன் இந்தியாவின் நிர்வாக இயக்குநர் மற்றும் தலைமை நிர்வாக அதிகாரி குணால் மெஹ்ரா கூறுகையில், "தமிழ்நாட்டில் குறிப்பாக சென்னையைச் சேர்ந்த மாணவர்கள் வெளிநாட்டில் தங்கள் உயர்கல்வியை மேற்கொள்வதில் இத்தகைய குறிப்பிடத்தக்க ஆர்வம் அதிகரித்து வருவதைக் கண்டு நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். கிரிம்சனில், மாணவர்களின் முழுத் திறனையும் வெளிப்படுத்தவும், வெளிநாட்டில் படிக்கும் அவர்களின் கனவுகளைத் தொடரவும் அவர்களுக்கு அதிகாரம் அளிப்பதில் நாங்கள் கடமைப்பட்டுள்ளோம். சர்வதேச சேர்க்கையின் சிக்கலான நிலப்பரப்பை வெற்றிகரமாக வழிநடத்த அவர்களுக்கு தேவையான கருவிகள், வழிகாட்டுதல் மற்றும் ஆதரவை வழங்குவதே எங்கள் நோக்கமாகும்" என்றார்.

தமிழ்நாட்டின் இத்தகைய வளர்ச்சிக்கான சாத்தியக்கூறுகளின் பின்னணியில், கிரிம்ஸன் எஜுகேஷன், தற்போதைய ஹார்வர்ட் சேர்க்கை நேர்காணல் மற்றும் முன்னாள் ஹார்வர்ட் அட்மிஷன் அதிகாரியுடன், மாணவர்கள் மற்றும் பெற்றோர்களுக்கான தகவல் பயிற்சி பட்டறைகளை தலைமை விருந்தினராக ஏற்பாடு செய்கிறது. இந்த அமர்வில், கிரிம்சன் வல்லுநர்கள் வெளிநாட்டு சேர்க்கைகளில் வெற்றி பெறுவதற்கு முக்கியமான பல்வேறு தலைப்புகளில் நுண்ணறிவுகளை வழங்குவார்கள், இதில் ஐவி லீக் கல்லூரிகளில் சேர்க்கை வாய்ப்புகளை அதிகரிப்பதற்கான உதவிக்குறிப்புகள், உதவித்தொகை மற்றும் நிதி உதவி, மற்றும் கல்விசார் சிறப்புடன் சமூக தன்னார்வத் தொண்டு ஆகியவற்றின் முக்கியத்துவம் ஆகியவை அடங்கும். . இதேபோன்ற பயிலரங்குகள் மார்ச் 24 ஆம் தேதி புது தில்லியிலும், ஏப்ரல் 6 ஆம் தேதி பெங்களூருவிலும் மற்றும் ஏப்ரல் 7 ஆம் தேதி மும்பையிலும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.